தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 23 டிசம்பர் 2022 கனி 1



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B, அர்ஜுனன்



MONTHLY
THE WORD OF CHRIST

# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39




பாடம் : 36

தலைப்பு : எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று

The end of all things is at hand

வேத வாசிப்பு : 1பேது.4:1-11

1. கடைசி நாட்களில் கொடியகாலங்கள் - 2தீமோ.3:1-5
2. கடைசி நாட்களில் பரியாசக்காரர் - 2பேது.3:3,4
3. இனிச் சம்பவிக்கப்போகிற - லூக்.21:36






மாத இதழுக்கான சந்தா செலுத்த இரு வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

Contact Us: 94435 58041

**the word of christ** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும்

**YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509







## THE WORD OF CHRIST

Monthly Magazine

Editor
B.ARJUNAN

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மாத இதழின் உள்ளே...

ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 23    டிசம்பர் – 2022    கனி – 1


ஆசிரியருரை

## தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்
## He Who Humble Himself Shall Be Exalted



**த**ன்னை உயர்வாக கருதுகிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். நம்மை நாமே உயர்வாக கருதுவதற்கு என்ன இருக்கிறது. நம்மால் ஏதாவது ஒன்றை உருவாக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ முடியுமா? ஆதிமுதலாக மனிதன் இந்த உலகத்தை சுற்றிச் சுற்றிச் வருகிறான். அவனால் செய்யமுடிந்தது அதுவே மற்றொன்றையும் செய்யமுடியாது. இப்படியிருக்கிறபடியால்; இயேசுவானவர் சொல்வதைக் கவனிப்போம்; "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (மத்.23:12). சொல்லப்பட்ட வசனத்தை கவனித்தீர்களா? உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். பார்வோன் என்ற எகிப்தின் அதிபதி தன்னை முழுவதுமாக உயர்த்தினான். அவனை மனமடிவடையச்செய்யும்படியாக தேவன் அவனிடத்தில் மோசேயையும் ஆரோனையும் அனுப்பினார்.

"அப்படியே மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் வந்து; உன்னைத் தாழ்த்த நீ எதுவரைக்கும் மனதில்லாதிருப்பாய்? என் சமுகத்தில் எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களைப் போகவிடு" என்று சொல்லும்படி தேவன் இவர்களை பார்வோனிடத்திற்கு அனுப்பினார் (யாத்.10:3). இதைக்கேட்ட பார்வோன் கொஞ்சமும் அசையவில்லை. எகிப்தின் அதிபதியாகிய அவன் மேட்டிமையுள்ளவனாகவும் இஸ்ரவேலை அற்பமாகவும் எண்ணி அவர்களை கொடுமையாக வேலைவாங்கி அடிமையாக வைத்திருந்தான். இதற்கு ஏற்றாற்போல பார்வோனின் ஜனங்கள் இவர்கள் பலுகிப்பெருகாதபடி ஆலோசனை சொல்லி பல உபாய தந்திரங்களை கையாண்டார்கள். இருந்தபோதும் இஸ்ரவேலர் தேவனுடைய ஆசீர்வாதத்தினாலே பலுகி பெருகினார்கள். இதைப்பொறுக்க மனதில்லாதிருந்த பார்வோன் இஸ்ரவேலை செங்கல் சூளையில் வேலைவாங்கி கொடுமைப்படுத்தினான். அவர்களோ தேவனை ஆராதிக்கும்படி எங்களை அனுப்பிவிடவேண்டும் என்று சொல்லி பத்துமுறை முறையிட்டார்கள். எகிப்திலே அநேக வாதைகளை தேவன் ஏற்படுத்தினார். அவனோ அவர்களை போகவிடாதிருந்தான். கடைசி வாதையில் பார்வோன் பயந்துபோய் அவர்களை அனுப்பிவிட்டான். பின்பு அவர்களை துரத்த ஆரம்பித்தான். செங்கடல் நடுவாக தேவன் பெரிய வெற்றியை இஸ்ரவேலுக்கு கட்டளையிட்டார். "ஜலம் திரும்பிவந்து, இரதங்களையும் குதிரைவீரரையும், அவர்கள் பின்னாகச் சமுத்திரத்தில் பிரவேசித்திருந்த பார்வோனுடைய இராணுவம் அனைத்தையும் மூடிக்கொண்டது;

அவர்களில் ஒருவனாகிலும் தப்பவில்லை" (யாத்.14:28). தன்னை உயத்துகிறவன் தாழ்த்தப்படுவான் என்ற வசனத்தின்படி அவனுடைய ஜனங்களும் தாழ்த்தப்பட்டு அழிந்துபோனார்கள்.

புதிய ஏற்பாட்டில் ஏரோதைக்குறித்து படிக்கிறோம்; "அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்து இறந்தான்" (அப்.12:23). அவன் பேசும்போது ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, தேவ சத்தம் என்றார்கள். அதை அவன் ஏற்றுக்கொள்ளும்போது அவன் அடிக்கப்பட்டான். மற்றவர்களால் புகழப்படுவதை விரும்பினான். தன்னை தேவனுக்குச் சமமாக ஜனங்கள் பேசுவதை பெருமையாக எண்ணினான். ஆகையால் கர்த்தர் அவனை அடித்தார். மனுஷனுக்கு ஏற்படும் புகழ்ச்சி கண்ணியை வருவிக்கும் என்ற வசனத்தின்படி அவனுக்குச் சம்பவித்தது.

தன்னை ஒருவன் தாழ்ததும்போது அவனுக்கு வரக்கூடிய ஆசீர்வாதங்கள் அதிகமாயிருக்கும். ஆண்டவர் இயேசு; "தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி.2:6-8). மேலான இடத்திலிருந்து கீழான இடத்திற்கு வருவது கூடாதகாரியம் என்று அநேகர் கருதுகின்றனர். இயேசு தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே தாழ்த்தியிருக்கும்போது நாம் எம்மாத்திரம். நம்மையும் தாழ்த்தவேண்டுமல்லவா? நாம் மண்ணாயிருக்கிறோம். அவர் தேவனுடைய சமுகத்திலிருந்து வந்து மாம்சத்திலே நம்மை மீட்கும்படியாக பிறந்தவர். அவர் மரணபரியந்தமும் தம்மை தாழ்த்தியிருக்கிறார் எனக் காண்கிறோம். நாமும் இந்தவிதமாக இயேசுவை மாதிரியாக கொண்டு நம்முடைய வாழ்க்கையில் நம்மை முழுவதுமாக தேவசமுகத்தில் தாழ்த்துவோம். அப்பொழுது தேவனால் உயர்த்தப்படுவோம். "நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு" என கொலோ.3:12-ல் வாசிக்கிறோம். நாம் நமக்காக வாழாமல் கர்த்தருக்காக தேவனுடைய சித்தம் நிறைவேறும்படியாக ஒப்புக்கொடுப்போம். நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருக்கிறோம். ஆகையால் இயேசுவைப்போல இரக்கசிந்தையுடையவர்களாகவும், தாழ்மையுள்ள வர்களாகவும், சாந்தமுள்ளவர்களாகவும், நீடிய பொறுமையுள்ளவர்களாகவும் இருந்து பிதாவாகிய தேவனுக்கு நம்மை ஒப்புக்கொடுத்து வாழும்போது தேவனால் இயேசுவைப்போல உயர்த்தப்படுவோம். கர்த்தர் நம்மை உயர்த்த வல்லவராயிருக்கிறார். மனிதனுக்காக தாழ்மையாய் நடக்க முற்படாதிருங்கள். அது மாய்மாலமாக இருக்கும். தேவன் நம்மை அறிகிறார் என்ற உணர்வு எப்பொழுதும் நமக்குள் இருக்கவேண்டும். "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக்.4:10). பொதுவாக ஜனங்கள் மனுஷருக்கு முன்பாக தாழ்மையாக இருப்பதைப்போல கும்பிடுபோடுவார்கள். இது அரசியல் வாதிகளில் பலரிடமிருந்து கற்றுக்கொண்ட கலையாக இருக்கிறது. இதனால் மனிதர்களுக்கு எந்தவிதமான பயனும் ஏற்படப்போவதில்லை. அவரவர்

நல்லநிலைக்கு சென்றவுடன் எல்லாவற்றையும் மறந்து தனக்காக வாழ ஆரம்பித்துவிடுவார்கள். ஆனால் நாம் அப்படி போதிக்கப்படவில்லை உன்னைப்போல பிறனை நேசி எனவும், தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக என்ற வசனத்தின்படி வாழவேண்டும். ஆகையால் எனக்கு அன்பானவர்களே, "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1பேது.5:6). உங்களை தெரிந்துகொண்ட கர்த்தர் உங்கள் மூலமாக பல காரியங்களைச் செய்வார். பூமியில் தேவனால் படைக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஒரு நோக்கத்தோடு உண்டாக்கப்பட்டு உள்ளது. அதைப்போல மனிதனை மேன்மையாக தம்முடைய சாயலில் உண்டாக்கினார். உண்டாக்கப்பட்ட நோக்கம் நிறைவேறும்படியாக தேவனுக்கு உங்களை முழுவதுமாக தாழ்த்தி ஒப்புக்கொடுங்கள்.

ஒப்புக்கொடுக்கும்போது கிடைக்கும் ஆசீர்வாதங்கள் அற்புதமானவைகளாக இருக்கிறது. "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக்கொடுப்பேன்" என்று நம்முற்பிதாக்களுக்கு கர்த்தர் சொல்லியிருந்தார் (2நாளா.7:14). இஸ்ரவேல் கர்த்தருடைய நாமத்தை தரித்த ஜனமாக இருந்தது. இன்றைக்கும் நாம் கிறிஸ்தவர்கள் என்று கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக்கொண்ட தேவனுடைய ஜனங்களாக இருக்கிறோம். அந்த நாமத்திற்கு மகிமைக்குறைச்சலை ஏற்படுத்துகிறவர்களாக ஒருபோதும் வாழக்கூடாது. அந்த நமத்தை அறியாதவர்களும் அறிந்து இரட்சிக்கப்படும்படியாக அதற்கு மகிமையைக் கொண்டுவரவேண்டும். இஸ்ரவேலர் தங்களைத் தாழ்த்தி பொல்லாதவழிகளைவிட்டு திரும்பினால் செவிகொடுப்பேன் என்றார். அதைப்போல இன்றும் மனந்திரும்புகிற பாவிகளை கர்த்தர் மன்னித்து தம்முடைய சபையில் சேர்க்கிறார் எனக் காண்கிறோம். "நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்; உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்" என்கிறார் (ஏசா.57:15). தேவன் தன்னைத்தான் உயர்த்துகிறவர்களிடத்தில் வாசம்பண்ணுகிறதில்லை. மேற்கண்ட வசனத்தின்படியாக யார் ஒருவன் தன்னைத் தாழ்த்துகிறானோ அப்படிப்பட்டவர்களிடத்தில் வாசம்பண்ணுகிறார். அவர்கள் தேவனுடைய வீடாகவும், சபையாகவும், பரிசுத்த சந்ததியாகவும், ஆசாரியகூட்டமாகவும் அழைக்கப்படுகிறார்கள். வாழ்க்கையில் பணிவு வேண்டும். பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறார். மேட்டிமைகொண்ட எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன். அப்படிப்பட்டவர்களை அவர் தூரத்திலிருந்து அறிகிறார். ஒரு சிறுபிள்ளையைப்போல தன்னை தாழ்த்தவேண்டும் என்பதற்காக; "இந்தப் பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்" என்றார் (மத்.18:4). சிறுபிள்ளைகளிடத்தில் ஒரு காரியத்தை சொன்னால் உடனே மறுப்பு சொல்லாமல் அதைச் செய்வார்கள். அதிகமான கீழ்ப்படிதல் அவர்களிடத்தில் காணப்படும். இதையே பெரியவர்களிடம் சொன்னால் எதற்கு? ஏன்? மற்றவர்களை

சொல்லக்கூடாதா? நான்தான் அதைச் செய்யவேண்டுமா? போன்ற பல கேள்விகளைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படியமாட்டார்கள். ஆனால் சிறுபிள்ளைகள் அப்படியல்ல, உடனே கீழ்ப்படிந்து செய்வார்கள். ஆகையால் பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்கிறார். நீங்கள் அந்த ராஜ்யத்தில் பிரவேசிக்க உங்களை முழுவதுமாக சிறுபிள்ளைகளைப்போல தாழ்த்தி ஒப்புக்கொடுங்கள்.

தாழ்மைக்கு இருவருடைய ஜெபத்தை ஆண்டவர் நமக்கு எடுத்துக்காட்டாக சொல்லுகிறார். "இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு; தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்" (லூக்.18:10-14). இந்த இரண்டுபேரில் பரிசேயனுடைய ஜெபம் நிராகரிக்கப்பட்டது. அவன் மேட்டிமையாக, தன்னைத் தாழ்த்தாமல் ஜெபித்தான். ஆனால் ஆயக்காரனோ தன்னை முழுவதுமாக தாழ்த்தி தான் ஒரு பாவி என்பதை அறிக்கையிட்டு கிருபையாய் இறங்கும்படி கேட்டுக்கொண்டான். ஆகையால் அவன் நீதிமானாக்கப்பட்டவனாய் வீடுதிரும்பினான். உங்களுடைய ஜெபம் எப்படிப்பட்டதாயிருக்கிறது. நீங்கள் உங்களை தேவ சமுகத்தில் தாழ்த்தும்போது கர்த்தரால் உயர்த்தப்படுவீர்கள். உங்களுடைய ஜெபம் ஆயக்காரனுடைய ஜெபத்தைப்போல இருக்கட்டும்.

**தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எப்படிப்பட்டவராயிருக்கிறார்?**

"தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது" (யாக்.4:6). மற்றவர்கள் பெருமையுள்ளவர்களுக்கு எதிராக இருக்கிறார்களோ இல்லையோ ஆனால் தேவன் அப்படிப்பட்டவர்களுக்கு எதிராளியாக இருக்கிறார். அவருடைய சமுகத்திலிருந்து ஒரு ஆசீர்வாதமும் பெருமையுள்ளவர்களுக்கு வந்துசேராது. ஆகையால் உங்களில் பெருமை, அதாவது மேட்டிமை, தன்னைத் தான் உயர்த்துவது போன்ற மோசமான எண்ணங்கள் இருக்குமானால் அவைகளை உங்களை விட்டு அகற்றிப்போடுங்கள். தேவனுக்குப் பிரியமானதைச் செய்யும்படியாக உங்களை அவருடைய சமுகத்திற்கு ஒப்புக்கொடுங்கள். பெருமையோடு வாழ்ந்து மரித்தவர்களுடைய நிலைமை என்னவானது என்பதை அறிந்துகொள்ளுங்கள். அப்படி வாழ்ந்து மரித்தவர்களை வேதாகமத்தில் பார்க்கலாம். அவர்களுடைய முன்னிலைமையைக்காட்டிலும் பின்னிலைமை மிகவும் கேடுள்ளதாகப் போயிருக்கும். அந்தவிதமாக போய்விடாதிருக்க பெருமையை உங்களில் உண்டாக்கும் மாம்சஇச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும் இடமளிக்காது கர்த்தருடைய வேதத்தில் பிரியமாய் இருக்க நாடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# புகைபிடித்தல்

## Smoking

*-J.C.Choate*



**– சென்றமாத இதழின் தொடர்ச்சி**

மீண்டும் அவன், "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1கொரி.6:19,20). இது உண்மையாக இருக்கின்றது, உன்னுடைய சரீரத்தை புகையினாலும், புகையிலையினால் உண்டாகும் நச்சுத் தன்மையுள்ள வேதியியல் பொருளினாலும் நிரப்பிக்கொண்டு, அதைக் கெடுத்துக் கொண்டும், கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொண்டும் இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் கற்பனை செய்ய முடிகிறதா? ஆனால் அதே நேரத்தில் இப்படிப்பட்டதான குழப்பத்தில் பிதாவோடும் கிறிஸ்துவோடு பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசஞ்பண்ண எதிர்பார்க்கின்றோமா? இப்பேர்பட்ட வெட்கக்கேடான வழியில் நாம் நம்முடைய சரீரங்களை எவ்வாறு நடத்த முடியும்? அவரையும் அவருடைய ஆவியையும் இவ்வகையாக கனவீனப்படுத்துவோமானால் எவ்வாறு கர்த்தர் நம்மோடு இருக்க வேண்டுமென எதிர்பார்க்க முடியும்?

வேதாகமம் தொடர்ச்சியாக நம்முடைய சரீரங்களையும், நம் ஆவிகளையும் காத்துக்கொள்ளுவது பற்றி கூறுவதற்கு அதிகமதிகமான வேதவாக்கியங்களைக் கொண்டுள்ளது. பவுல், "ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வைக்காதே, மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே, உன்னைச் சுத்தவனாகக் காத்துக்கொள்" (1தீமோ.5:22) என்று சொல்லுகிறான். நாம் நம்மை உலகத்தால் கறைபடாதபடிக்குக் காத்துக்கொள்ளவேண்டும் என்று யாக்கோபு கூறுகிறான் "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபாடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது" (யாக்.1:27). யோவான், "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்" (1யோவா.3:2,3) என்று எழுதுதினான்.

இப்போது நான் உங்களிடம் கேட்கிறேன், கிறிஸ்து, நமது ஆண்டவர் புகையிலையை எந்தவடிவத்திலும் பயன்படுத்தினால் குற்றவாளியாக இருப்பார் என்று நீங்கள் ஒரு நிமிடம் நினைக்கிறீர்களா? இல்லாவிட்டால், இப்படிப்பட்ட அசுத்தமான, அழிவுக்கேதுவான பழக்கத்தில் நாம் பங்குகொண்டால், அவர் நம்மில் பிரியப்படுவார் என்று நினைக்கிறீர்களா?

தொடர்ச்சியாக அப்போஸ்தலனாகிய பவுல் கூறின வார்த்தைகளை மீண்டும் கேட்பீர்களாக: "அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோம.12:1). தயவுசெய்து, அவன் தேவனுக்குப் பிரியமான பலி என்று விளக்குகிறதைக் கவனியுங்கள். பழையஏற்பாட்டு காலக்கட்டத்தில், ஒவ்வொரு பலியும் குற்றமற்றதாகவும் பழுதற்றதாகவும் இருந்தன. நம்முடைய காலத்தில், நீ தேவனுக்கு புகைபிடித்தலினாலும் புகையிலையில் காணப்படும் நச்சுத்தன்மையுள்ள வேதியியல் பொருளினாலும், புகையிலை வாசனையினுடன்கூடிய துர்நாற்றத்தினாலும், புகையிலை நஞ்சின் கறையினாலும், இருமலினாலும், திசுக்களில் காற்று பரவிய நிலையிலுள்ள எம்பிசிமாவால் ஏற்படும் நேயினாலும் மற்றும் மற்ற வியாதிகளால் நிறைந்துள்ள. உன் சரீரத்தினை நீண்ட காலம் வாழ்வோம் என்ற நம்பிக்கையற்ற நிலையில் பலியாக தேவனுக்குக் கொடுத்தால், கர்த்தர் உன்மேல் பிரியமாயிருப்பார் என்று கற்பனை செய்ய உன்னால் முடியுமா? அத்தகைய பலியினால் தேவன் பிரியப்படுவார் என்று கூற உங்களை நீங்களே கேலிக்கூத்தாக்கிக் கொள்ள வேண்டியிருக்கும். தேவன் பரிசுத்தமும் உயிருள்ள ஜீவபலியையே விரும்புகிறார், செத்துப்போனதையும் நோய்கொண்டதையும் அல்ல. பேதுரு சொல்லுவதைக் கேளுங்கள், "பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி" என்றார்.

மேலும், வேதாகமம் நாம் நல்ல முன்மாதிரியாயிருக்கவேண்டுமென கற்பிக்கிறது; "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்.5:16). பவுல் தீமோத்தேயுவிடம் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு என்றான் "உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு" (1தீமோ.4:12). ஆனால் உன்னிடம் நான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்; **நீங்கள் உங்களுடைய பிள்ளைகள் உங்களுடைய புகைபிடித்தல் மாதிரியைப் பின்பற்ற விரும்புவீர்களா?** நிச்சயமாக மாட்டீர்கள்! அது உங்களுக்கு ஒன்றும் சொல்லவில்லையா? அது மற்றவர்களுக்கு நல்லதாக இல்லாவிட்டால் உங்களுக்கு அது எப்படி நல்லதாக இருக்க முடியும்?

புகைப்பிடித்தலும் புகையிலையோடு சம்பந்தப்பட்ட மற்ற வேறு கெட்ட பழக்கவழக்கங்களும் கூட அதிக செலவுள்ளவைகள். ஒவ்வொரு நாளும் உங்களுடைய புகையிலை பழக்கத்திற்காக எவ்வளவு செலவழிக்கிறீர்கள் என்ற ஏதேனும் எண்ணம் உண்டா? புகைபிடித்தல் உங்களுடைய உடல்நலத்திற்கு உதவுகிறதில்லை, இது பில்களை செலுத்த உங்களுக்கு உதவிடுகிறதில்லை. நிச்சயமாக அந்தப் பணத்தை சிறந்த உணவளிப்பதற்கோ மேலும் உன் குடும்பத்தை உடுத்துவிப்பதற்கோ நீ பயன்படுத்த முடியும். பல ஆண்டுகளாக நீங்கள் அந்தப் பணத்தை சேமித்தால் அதைக் கொண்டு நீங்கள் என்ன செய்ய முடியும் என்று சொல்ல முடியாது! துரதிஷ்டவசமாக அதிகமான மக்கள் பசியினால் வாடுகின்றனர், சிலர் பிச்சையெடுத்துக்கொண்டிருக்கின்றனர், இருந்தபோதிலும் அவர்கள் தங்களுடைய சிகரெட் பிடித்தலுக்காகவும் மற்ற தவறான பழக்கத்திற்காகவும் பணத்தை வைத்திருக்கின்றனர்.

ஆனால் சிலர், மக்கள் புகைபிடிக்கவில்லையென்றால், புகையிலையைப் பயிரிடுகிறவர்கள் அதனை விற்கவும் வாழ்வாதாரத்துக்குத் தேவையானவற்றை சம்பாதிக்கவும் இயலாமல் போய்விடும் என்று இன்னும் அவர்கள் புகையிலை பற்றி வாக்குவாதம் செய்யலாம். கம்பெனிகள் வர்த்தகத்தை விட்டுவிட வேண்டியிருக்குமே. மேலும் அவைகளில் பணிசெய்கிறவர்கள் தங்களுடைய பணியை இழக்க நேரிடுமே, அரசாங்கமும் வரிப்பணத்தை இழக்க நேரிடுமே என்று இன்னும் பல காரணங்களைக் கூறி வாக்குவாதம் செய்வார்கள். அது உண்மையே, ஆனால் கேள்வி தொடருகிறது: ஒரு சில மக்கள் வாழ்க்கை வாழ்கின்றனர் அல்லது கோடிக் கணக்கானவர் மேலும் கோடிக்கனக்கான மக்கள் புகைபிடிக்காமல் தங்கள் வாழ்க்கையை காப்பாற்றுகிறார்கள் என்பதில் எது மிக முக்கியமானது?

புகையிலை பயன்படுத்துவோர், புகைபிடிக்கும் தங்களுடைய பழக்கவழக்கத்தினை தங்கள் சுய இன்பத்திற்காக மட்டுமே என நினைக்கின்றனர். உண்மையாகவே, இது மிகவும் ஆபத்தானது ஆனால் நீங்கள், "நான் அதை விடமுடியவில்லை என காரணம் கூறலாம்" நிச்சயமாக நீங்கள் விரும்பினால் அதை விட்டுவிடமுடியும். மில்லியன் கணக்கானவர்கள் அதை விட்டு விட்டிருக்கின்றனர். ஆனால் இது உங்களைக் கொன்றுவிடும், நீங்கள் ஒரு நல்ல வாய்ப்பு இருப்பதை அறிகிற போது புகைத்தலில் நீங்கள் எப்படி மகிழ்ச்சியடைய முடியும்? என் நண்பர்களே, ஒவ்வொரு நாளும் நீங்கள் புகைபிடித்து உங்கள் வாழ்நாட்களைக் குறைத்துக் கொள்ளுவதோடு உங்கள் குடும்ப அங்கத்தினர் வாழ்க்கையும் குறைவதற்கு வழி ஏற்படுத்துகின்றீர்கள். அவர்கள் நீங்கள் சுவாசித்த புகையை உள்ளிழுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளவர்கள். நீங்கள் இதைப்பற்றி சிந்தித்து, முடிந்தவரை இதை விட்டுவிடுங்கள்.



**"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும்,
தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும்
அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக்
கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம்
பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" (1கொரிந்தியர் 3:16,17)**





# இயேசுவின் கட்டளையை நிறைவேற்ற ஆயத்தமா?

நம் ஆண்டவர் இயேசு பரமேறிச் செல்வதற்கு முன்பு தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளை; **"நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்." (மத்தேயு 28:19,20).**

நாம் உலகமெங்கும் போகாவிட்டாலும் நம்மால் முடிந்த அளவு இக்கட்டளையை நமது தமிழ்நாடு முழுவதும் சென்று நிறைவேற்றவேண்டிய பொறுப்பு உடையவர்களாக இருக்கிறோம். தமிழகத்தில் தற்போது 38 மாவட்டங்கள் இருக்கின்றன. இன்னும் அநேக மாவட்டங்கள் பிரிவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. தமிழகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிற நீங்களும் நானும் நம்மக்களுக்கு இயேசுவின் உபதேசத்தை அவர்களுக்கு கொண்டு சேர்க்கவேண்டும். ஒருவரும் கெட்டுப்போவது பிதாவின் சித்தமல்ல. அவர் ஒருவருக்கும் தூரமானவரும் அல்ல. எனவே எங்களோடு தொடர்புகொள்ளுங்கள். உங்களோடு இணைந்து கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்ற ஆயத்தமாயிருக்கிறோம்.

**சபை ஊழியம்:** உங்கள் பகுதியில் கிறிஸ்துவின் சபை (கட்டிடம் அல்ல) சபையாரை உருவாக்க எங்களோடு தொர்பு கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் உங்கள் மூலமாக கர்த்தருடைய சபையை உருவாக்குவோம். இயேசு பேதுருவைப்பார்த்து **"இந்தக்கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதைமேற்கொள்வதில்லை என்றார்" (மத்.16:18).**

**வேதாகம பாடசாலை: "வேதவாக்கியங்களை ஆராந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" என்றார் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து (யோவா.5:39).** வேதாகமத்தை சரியாக நேர்த்தியாக கற்றுக்கொள்ள எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள் நாங்கள் உங்கள் பகுதிக்கு வந்து இரண்டு நாள் வேதாகமத்தை உங்களுக்கு கற்றுக்கொடுப்போம்.

**நற்செய்தி கூட்டங்கள்:** உங்கள் பகுதியில் வருடம் ஒரு முறை சுவிசேஷகூட்டங்கள் நடத்த விரும்பினால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் ஒரு குழுவாக வருகை தந்து உங்களுடைய ஜனங்களுக்கு இயேசுவின் மெய்யான சுவிசேஷமாகிய சத்தியத்தை அறிவிப்போம். **"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்" (1கொரி.15:3,4) இதுவே நற்செய்தி.**



இவ்வூழியங்களை எங்களோடு சேர்ந்து தமிழகம் முழுவதும் செய்யவும், தொடர்ந்து கிறிஸ்துவுக்காக பணியாற்றவும் விரும்பினால் தொடர்பு கொள்ளுங்கள்.

**Bro.Arjunan, Evangelist, Church of Christ**
**Post Office Box No.5, Batlagundu -624 202**
**TAMILNADU, INDIA**
**Mobile: 94435 58041, 63793 50509**

பெண்கள் பகுதி



## துணையில்லா இடங்கள்
## The Lonely Places

*எனது மனதின் துணையில்லா இடங்களில்*
*நடக்கிறேன் நான் உம்மோடு*
*இருண்டுபோன சாலைகளிலும்*
*அமைதியான நீரோடை அருகிலும்*
*விண்மீன்கள் மறைந்திருக்கிற*
*இருள் சூழ்ந்துகொண்ட ஆகாயங்களின் கீழும்.*

*நடக்கிறேன் நான் உம்மோடு*
*துணையில்லா கும்பல்களிலும்*
*சுழன்றடிக்கின்ற உறைபனி பொழியுமிடத்திலும்*
*மனதை வாட்டுகின்ற இரவின் சப்தங்களினிடத்திலும்*
*வெறுமையான காற்று நிரம்பி*
*வளைந்துபோன மரங்களினிடத்திலும்*
*காற்று மற்றும் மழையின் அடியிலும்;*

*நடக்கிறேன் நாம் உம்மோடு*
*சமாதானத்தை அனுபவித்து*
*இல்லாமையில், உள்ளே:*
*நான் உணருகிறேன் உமது அன்பை*
*மேலும், கேட்கிறேன் சாந்தமுள்ள பாடலின் இனிய தாளமான*
*உமது குரலை*
*சகோதரத்துவத்தில்,*
*மதிப்புமிகுந்த, எனக்குப் பிரியமான*
*அழகின், ஆற்றலின் மனோ வார்த்தைகளில்*
*என் ஆத்துமாவை தாங்கும் எண்ணங்கள்*
*என் மனதின் துணையில்லா இடங்களை நிரப்பும்.*

-Betty

பா.ஏ

வேதாகம கதாபாத்திரங்கள்

Bible Characters

11



# பரிசுத்த வேதாகமத்தில் ஏசா

## Esau In The Holy Bible

1. ஈசாக்கின் மூத்த மகன் ரோம அங்கிபோர்த்தவன் - ஆதி.25:25
2. ஏசா வேட்டையில் வல்லவன் - ஆதி.25:27
3. தன் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப்போட்டான் - ஆதி.25:33
4. ஏசா யாக்கோபை பகைத்து கொன்றுபோட திட்டம் - ஆதி.27:41
5. ஏசா இஸ்மவேலிடத்துக்குப்போய் விவாகம் - ஆதி.28:9
6. ஏசாவினுடையவைகள் எவ்வளவாய் தேடிப்பார்க்கப்பட்டது என ஒபதியாவில் படிக்கிறோம் - ஒப.6
7. ஏசா வம்சத்தாரோ வைக்கோல் துரும்பாவார்கள் - ஒப.18
8. கர்த்தர் நான் ஏசாவை வெறுத்தேன் என்கிறார் - ரோ.9:13
9. ஒருவனும் இந்த ஏசாவைப்போல சீர்கெட்டவனாய் போய்விடக்கூடாது - எபி.12:15,16
10. ஏதோம் பாழாகும் என்று சொல்லப்பட்டது - ஏரே.49:17

இந்தப் பாடத்திற்கான கேள்வி:

ஏசாவுக்கு மற்றொரு பெயர் என்ன?

விடை: ஏதோம். "...ஏசாவுக்கு ஏதோம் என்றும் பேர்" (ஆதி.36:8)





பு.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

12



### பரிசுத்த வேதாகமத்தில் மத்தேயு
### Matthew In The Holy Bible

1. இவன் 12 அப்போஸ்தலர்களில் ஒருவன் - மத்.10:3
2. இவன்ஒரு ஆயக்காரன் (வரிவசூலிப்பவன்) - மத்.10:3
3. இயேசு அழைத்தவுடன் ஆயத்துறையின் வேலையை விட்டு இயேசுவுக்குப் பின்சென்றான் - மாற்.2:14
4. இவனுக்கு மற்றொரு பெயர் லேவி - லூக்.5:27
5. இயேசுவுக்கு பெரிய விருந்துபண்ணினான் - லூக்.5:29
6. தமது புத்தகத்தில் ஆபிரகாம் துவங்கி இயேசுவின் வம்சவரலாறை பட்டியலிடுகிறான் - மத்.1:1
7. இயேசுவின் பரமேறுதலுக்குப்பின் எருசலேமிலே முதல் கூட்டத்தில் இருந்தவர்களில் ஒருவன் - அப்.1:13
8. கலிலேயன், கப்பர் நகூம் ஊரான் - மாற்.2:1,13
9. கலிலேயர் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள் - யோவா.4:45
10. கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள் என்று தூதர்கள் சொல்லும்போது அங்கே இருந்தான் - அப்.1:11

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

பரலோகராஜ்யம் இவைகளுக்கு ஒப்பாயிருக்கிறது என்று 3 உவமைகளும், இயேசு செய்த அற்புதங்கள் இரண்டும் மற்ற சுவிசேஷபுத்தகத்தில் சொல்லப்படாதவைகள். மத்தேயு புத்தகத்தில் எந்தெந்த அதிகாரத்தில் இருக்கிறது?

**விடை:** மத்தேயு 13 மற்றும் 9 அதிகாரத்தில்



**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



*தற்சோதனை பகுதி - 49*

### 49. கிறிஸ்துவின் உபதேசத்தை குறித்து வேதாகம போதனை என்ன?

1. ஒருவன் இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால் அவனை ஏற்றுக்கொள்ளவும் வாழ்த்துதல் சொல்லவும் கூடாது ☐ வசன ஆதாரம் -
2. கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் கவனிக்கவேண்டிய அவசியமில்லை ☐ வசன ஆதாரம்---------------
3. என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது என்றார் இயேசு ☐ வசன ஆதாரம்-
4. ஜனங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தைக் குறித்து ஆச்சரியப்படவில்லை ☐ வசன ஆதாரம் --------------------------
5. நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் என்றார் ☐ வசன ஆதாரம்--------------------------
6. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிக்கிறார்கள் என்று ஏசாயா சொல்லவில்லை ☐ வசன ஆதாரம்--------------------------
7. இந்த புதிய உபதேசம் எப்படிப்பட்டது? என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள் ☐ வசன ஆதாரம்--------------------------
8. பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் உபதேசத்தைக்குறித்து இயேசு எச்சரிக்கவில்லை ☐ வசன ஆதாரம்----------------------------------
9. செர்கியுபவுல் என்ற அதிபதி கர்த்தருடைய உபதேசத்தைக் குறித்து அதிசயப்பட்டு விசுவாசித்தான் ☐ வசன ஆதாரம்------------------
10. தேவபக்திக்கேற்ற உபதேசங்களை ஒப்புக்கொள்ளாமல் வேற்றுமையான உபதேசங்களை போதிக்கிறவர்கள் இறுமாப்புள்ளவர்களல்ல

    ☐ வசன ஆதாரம்-----------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**

**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**


**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**


'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

**வேதவாக்கியங்களின்படி** - Jim Massey
**கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு** – *மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் – 30**

**சபையின் அமைப்பில் ஆபத்தான அடையாளங்கள்**




**வரைகுறிப்பு**

**1. சபைகளின் மீது ஏதாகிலும் ஒரு அமைப்பு**
**2. சபைகளின் மத்தியில் ஏதாகிலும் ஒரு அமைப்பு**
**3. சபைகளில் வெளி அலுவலர்கள்**
**4. சுயாதீனமான சபைகளிலிருந்து ஏதாகிலும் மாற்றம்**

**கலந்துரையாடல்**

**1. சபைகளின் மீது ஏதாகிலும் ஒரு அமைப்பு.** சபை அமைப்பானது பாழக்கப்பட்டு கொண்டிருக்கிற பொழுது அங்கே சில அடையாளங்கள் அல்லது குறியீடுகள் இருக்கின்றன என சொல்லுகிறோம். இவைகள் ஆபத்துக்கான அடையாளங்கள் என்று அழைக்கப்படலாம், அவைகள் தேவனுடைய திட்டம் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுகின்றன. எந்தவொரு அமைப்பும் சபைகளின் மீது அதிகாரம் சொலுத்தினால் அது ஒரு ஆபத்தான அடையாளமாக இருக்கிறது. இவ்வகையான அமைப்பு பல நாமகரண சபைகளுக்குள் காணப்படக்கூடும். பிராந்திய சபைகளைக் காட்டிலும் பெரிதான ஒரு மைய அமைப்பு அங்கே இருக்கிறது. இது பல சபைகளுக்கான அலுவர்களைக் கொண்ட ஒரு அதிகார மையமாக இருக்கிறது. இப் பெரிய அமைப்பானது பிராந்திய சபைகளுக்காக தீர்மானங்கள் செய்கின்றன. இது அவர்களுடைய பிரசங்கியாரை தேர்வு செய்து அவர்களை அவர்களுடைய செயல்பாடுகளுக்கு வழிநடத்தி அவர்களிடமிருந்து தீர்வையையும் பெற்றுக்கொள்ளுகிறது. வேதாகமம் இப்படிப்பட்ட எந்தவொரு அமைப்பையும் அங்கீகரிக்கிறதில்லை என்பதைக்குறித்து கிறிஸ்துவின் சபையார் உணர்வுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால் அமைப்பில் இதேவகையான மாற்றம் சில வேளைகளில் தேவனுடைய ஜனங்கள் மத்தியிலும் தொற்றிக் கொள்கிறது. உதாரணமாக பல அங்கத்தினர்கள் வேதாகம பயிற்சி கல்லூரிகள் ஒரு மார்க்கத்தைப் பரப்பும் அமைப்பாக (மிஷன்) தங்களுக்கு மேலாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் அவர்கள் வெள்ளைக்கார சகோதரர்கள் தங்களுக்கான பிரசங்கியாரை தேர்வு செய்து அவர்களுக்கு ஊதியம் அளிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஒரு சபையில் பிரச்சனை எழும்பும் போழுது என்ன செய்ய வேண்டும் என்று அமெரிக்க சகோதரர்கள் அவர்களுக்கு சொல்ல வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் வேதாகம பள்ளிகள் பிராந்திய சபைகளுக்கு மேலான அதிகாரம் இல்லாதவைகளாக இருக்கின்றன. வெள்ளைக்கார மிஷனரிகள் சபையின் முடிவுகளை செயல்படுத்த முடியாது. ஒவ்வொரு பிராந்திய சபையிலும் முழுமையான சுயாதீனம் இருக்க வேண்டும். சபைகளின் மீது புறம்பே எந்த அதிகாரமோ அல்லது அமைப்போ இருக்கக்கூடாது. எந்த அமைப்பாகிலும் சபைகளின் மீது அதிகாரத்தை பெறுமேயாகில் அது ஆபத்துக்கும், கேடுபாட்டுக்குமான ஒரு அடையாளமாக இருக்கிறது.

**2. சபைகளின் மத்தியில் ஏதாகிலும் ஒரு அமைப்பு.** அநேக அங்கத்தினர்கள் நாமகரணக்கூட்டங்களிலிருந்து வெளியே வந்திருக்கிறபடியினால் அவர்கள் முன்பு செய்து வந்த வழக்கத்தின்படியே தங்களை வடிவமைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். அவர்கள் அவ்வாறு செய்வதற்கு, தங்களுடைய ஒரே விருப்பத்தின்படி ஒன்றிணைய சபைகளை ஒன்று சேர்க்க "சுவிசேஷ கூட்டங்கள்" போன்ற வழி முறைகளை பயன்படுத்துகிறார்கள். அவர்கள் ஒவ்வொரு பிராந்திய சபையிலிருந்தும் பிரதிநிதிகள் அல்லது குழுக்களை அனுப்பி ஒரு பொதுவான மாநாட்டில் கூடிவருகிறார்கள். அவர்கள் ஒருவேளை தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் போன்ற அலுவர்களை தேர்ந்தெடுக்கலாம். அவர்கள் ஒருவேளை ஒவ்வொரு சபையிலிருந்தும் பணத் தொகையை மதிப்பிட்டு ஒரு

கருவூலத்தை கொண்டிருக்கக்கூடும். அவர்கள் தங்களை "கிழக்கு நைஜீரியாவில் உள்ள மக்கள் பிரிவின் சுவிசேஷ கூட்டம்" (NGWA) என்று ஒரு வேளை அழைத்துக்கொள்ளக்கூடும். மாவட்டங்களை ஒரு குழுவாக காண்பிக்கும்படியாக நாமகரண ஆலோசனை சபைகள் மற்றும் மறை மாவட்டங்களை போன்று செயல்படக்கூடும். இந்த நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு வகை பிரிவினை கூட்ட மாவட்டங்களுக்கு இடையே எந்த வித்தியாசமும் இல்லை. சுவிசேஷ கூட்டங்கள் நற்கிரியைகளை செய்யக்கூடும் என்ற போதிலும் நாமகரண கூட்டத்தாரின் குழுக்களும் அவ்வாறே செய்கின்றன. இது அவர்களை வேதவாக்கியங்களின்படியே நடக்கிறவர்களாக செய்கிறதில்லை. வேதாகமத்திலே எந்த ஒழுங்குபடுத்தப்பட்ட சுவிசேஷ கூட்டங்களும் காணப்படவில்லை அவைகள் நாமகரண கூட்டத்தாரின் பின்னணியில் இருந்து வந்த படைப்புகளாக இருக்கின்றன. அங்கத்தினர்கள் பிரிவினைக் கூட்டங்களில் இருந்து வந்திருக்கிறார்கள். ஆனால் பிரிவினைக் கூட்டங்கள் அங்கத்தினர்களில் இருந்து வரவில்லை. மாற்றங்கள் தொடக்கத்தில் சிறியதாக காணப்பட்ட போதிலும், அவைகள் மிகப்பெரும் விசுவாச வீழ்ச்சிக்கு (வழிவிலக) வழி நடத்துகின்றன.

சுவிசேஷ கூட்டங்களுக்கு பதிலாக ஒவ்வொரு சபையும் தனித்தனியே "விரிவுரைகள் அல்லது விளக்கங்கள்" பற்றிய கூட்டங்களை நடத்தலாம். இதன் விளைவாக முந்தைய கூட்டங்களின் சகல நன்மையான குறிப்புகளும் நிலைவரப்பட முடியும், அதே வேளையில் ஆபத்தை விளைவிக்கும் மற்றும் பாவம் நிறைந்த பழக்க வழக்கங்கள் விட்டுவிடப்படுகின்றன. சகோதரர்கள் இவ்விதமாக இன்னும் நல்ல கிறிஸ்தவ ஐக்கியத்தையும் போதனையையும் கொண்டவர்களாயிருந்து எங்கெல்லாம் கூட்டங்கள் காணப்படுகின்றனவோ அங்கேயெல்லாம் சபையை உற்சாகப்படுத்துவார்கள். ஆனால் நாமகரணக் கூட்ட மக்களோ அலுவர்கள், கரூவூலங்கள் மற்றும் ஒன்று சேர்க்கப்பட்ட மாவட்டங்கள் ஆகிய இவைகளைக் கொண்டு இவற்றை ஒழித்து விடுவார்கள். ஆனால் அவர்கள் சபைகளுக்காக முடிவுகள் (தீர்மானங்கள்) செய்யும்படியாக திட்டக்கூட்டங்களை நடத்த மாட்டார்கள். அவர்களுக்கென்று எந்த மதிப்பீடுகளோ, வரிகளோ இருக்காது. நம்மை பொறுத்தவரையில் சகல நன்மையான காரியங்களும் போய்விடுகின்றன. நாம் எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து நலமானதைப் பிடித்துக்கொண்டு, பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகும்படி வேதாகமம் நமக்குக் கட்டளையிடுகிறது (1தெச.5:21-22). சுவிசேஷ கூட்டங்கள் நிரூபணம் செய்யப்படுகிற பொழுது அல்லது பரிசோதிக்கப்படுகிற பொழுது அவைகள் புறக்கணிக்கப்படும் அவைகளுடைய பொல்லாப்புக்கும் விலகியிருக்க முடியும். ஆனால் பிராந்திய சபைக்கான விரிவுரை அல்லது விளக்கவுரைக் கூட்டங்கள் நடத்தப்படுமாகில் அதில் பங்கு பெறுகிறவர்களினால் நன்றாய் பற்றிக் கொள்ள முடியும். சபைகளுக்கு மத்தியிலே எந்தவொரு நிறுவனமும் ஒழுங்கு படுத்தப்பட்ட சுவிசேஷகூட்டங்கள் போன்று நடத்தப்படுமேயாகில் அது தேவனுடைய வார்த்தையை விட்டு விலகுவதற்கு ஏதுவான ஒரு அபாயகரமான மற்றும் பாவம் நிறைந்த அடையாளமாக இருக்கிறது.

**3. சபைகளில் வெளி அலுவர்கள்.** சபைகளிலே வெளியேயிருந்து வருகிற அலுவலர்களை கொண்டிருப்பது என்பது சபை அமைப்பில் மற்றொரு அபாயகரமான அடையாளமாயிருக்கிறது. இந்த அலுவர்கள் சபைகளின் மீது ஏற்படுத்தப்படுகிற அமைப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கிற வகையாக இருக்கலாம் (மேலே) அல்லது அவர்கள் மற்றொரு பிராந்திய சபையிலிருந்து வந்த அலுவலர்கள் அல்லது அங்கத்தினர்களாக இருக்கலாம். ஒரு பெரிய பலம்வாய்ந்த சபையானது ஒரு சிறிய மற்றும் பலவீனமான பிராந்திய சபைக்கு அருகே இருக்குமேயாகில் பெரிய சபையானது சிறிய சபையை ஆளுகை செய்ய முயற்சிக்கலாம். ஒரு முதிர்ந்த சபையானது அதனுடைய அலுவலர்கள் சுற்றியுள்ள புதிய சபைகளுக்கு அலுவலர்களாயிருக்கிறார்கள் என்று ஒருவேளை நினைக்கலாம். இது உண்மை அல்ல. 1பேது.5:2, "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேயுங்கள்" என்று மூப்பர்களுக்கு புத்தி சொல்கிறது. ஒரு சபையிலே இருக்கிற மூப்பர்கள், "சபையார் மத்தியிலே இருக்கிறவர்கள்" தானே தவிர வேறெந்த

பிராந்திய சபையும் அல்ல, பரிசுத்தஆவி அவர்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படி (அப்.20:17) அந்த மூப்பர்கள் மற்ற சபைகளிடத்தில் அக்கறையுடையவர்களாய் இருக்கக்கூடாது என்று இது குறிப்பிடுகிறதில்லை. அல்லது அவர்களுக்கு உதவி செய்யக்கூடாது என்றும் அவர்களுடனே ஒத்துழைக்கக்கூடாது என்றும் இது குறிப்பிடுகிறதில்லை. அவர்கள் நிச்சயமாக கிறிஸ்துவினுடைய அதே சரீரத்திலே அவர்களுடனே அவயமாக இருக்க முடியும் (எபே.4:16). ஆனால் இந்த மூப்பர்கள் சகோதரர்களுக்கு உதவி செய்து உற்சாகமூட்டுகிறவர்களாயிருக்கிறார்களே தவிர மற்ற சபைகளின் மீது அதிகாரிகளாக இருக்கிறதில்லை. அவர்களுடைய ஆளுகையானது அவர்களுடைய பிராந்திய சபையில் மட்டுமே இருக்கிறது. ஒவ்வொரு சபையும் அதனுடைய சொந்த காரியங்களை நடத்துகிறது. ஒரு பிராந்திய சபைக்குள்ளே புறம்பேயிருந்து எந்தவகையான அலுவர்களை கொண்டிருந்தாலும் அது ஒரு ஆபத்தான அடையாளமாகவும், சபையின் ஆளுகையை குறித்த தேவனுடைய திட்டத்திலே ஒரு கேடாகவும் இருக்கிறது.

**4. சுயாதீனமான சபைகளிலிருந்து ஏதாகிலும் மாற்றம்.** சபைகளுக்கான தேவனுடைய திட்டமானது சுயாட்சி அல்லது "தன் ஆளுகை" ஆக இருக்கிறது. ஒவ்வொரு பிராந்திய சபையும் கிறிஸ்துவுக்குக் கீழாக சுயாதீனமுள்ளதாக இருக்கிறது. இது வேறெந்த சபையுடனேயும் ஒழுங்கு படுத்தப்படுகிறதில்லை அல்லது சபைகளை ஆளும்படி எந்த நிறுவனமும் இருக்கிறதில்லை. இது வேறெந்த சபையின் அலுவலர்களுக்கும் கீழ்ப்படுத்தப்பட்டதாயிருக்கிறதில்லை. ஒவ்வொரு சபையும் தன்னுடைய சொந்தமான முடிவுகளை எடுக்கின்றன. அதனுடைய சொந்த காரியங்களை ஒழுங்குபடுத்திக் கொள்கின்றன. அதன் சொந்த அலுவலர்களை தேர்ந்தெடுத்துக் கொள்கின்றன. அதனுடைய சொந்த நிதிகளை வழங்குகின்றன; அதனுடைய சொந்த ஆராதனைகளை நடத்துகின்றன. அதன் ஒழுங்கற்று நடக்கிற சொந்த உறுப்பினர்களை ஒழுங்குபடுத்துகின்றன. இது தேவனுடைய திட்டமாக இருக்கிறது.இதுவே வேதாகம வழியாக இருக்கிறது. வேறெந்த முறையோ அல்லது ஏற்பாடோ தேவனுடைய அதிகாரத்தை மீறுவதாகவும், தேவனுடைய நோக்கத்திற்கு ஒரு கேடாகவும் இருக்கிறது. வேதாகம காரியங்களை வேதாகம வழிகளிலே வழக்கப்படுத்திக் கொள்வதன் மூலமாக நாம் தேவனுடைய காரியங்களை தேவனுடைய வழியிலே செய்வோமாக. தேவனுடைய வழியும், தேவனுடைய திட்டமும் மிகச் சிறந்ததாயிருக்கிறது.

கேள்வி

1. கேடான ஒரு குறியீடானது ஒரு --------- என்று அழைக்கப்படலாம்.
2. எந்த நிறுவனமானது (அமைப்பானது) பலசபைகளின் மீது அதிகாரம் செலுத்த விருப்பமாயிருக்கிறது? ---------
3. பிராந்திய சபைகளின் மீது வெள்ளைக்கார சகோதரர்களுக்கு அதிகாரம் இருக்கிறதா?
4. -----இருந்து வெளிவருவது அநேக அங்கத்தினர்கள் தவறான நிறுவனங்களை விரும்புவதற்கு காரணமாக இருக்கிறது.
5. சுவிசேஷ கூட்டங்களின் 3 தீமைகளை பெயரிட்டு காட்டவும் ----------
6. வேதவாக்கியங்களின்படியே சுவிசேஷ கூட்டங்களுக்கு மாற்றாக எது இருக்க முடியும்?
7. ஒரு சபையின் அலுவலர்கள் மற்றொரு சபையை விசாரணை செய்யலாமா?
8. மூப்பர்கள் மந்தையாயிருக்கிற-------- கண்காணிப்பு செய்கிறார்கள்.
9. பரிசுத்த ஆவியானவர் மூப்பர்களை எத்தனை பிராந்திய சபைகளுக்கு மேலாக கண்காணிகள் ஆக்குகிறார்?
10. வேதவாக்கியங்களின் படியேயான சபைகளை விவரிக்கும் இரண்டு வார்த்தைகளை அளிக்கவும்.

## சபையின் அமைப்பில் அபாயகரமான அடையாளங்கள்

1. சபைகளின் மீது முடிவு செய்யும் அதிகாரத்துடன் ஏதாகிலும் ஒரு நிறுவனம்

மத்திய | மதக்குழுவின் | அதிகாரம்

சபை | சபை | சபை

2. எந்த ஒரு நிறுவன அமைப்பும் பிராந்திய சபைகளுக்கு மத்தியில் ஏற்படுமேயாகில் (நற்கிரியைகள் செய்வதற்கானாலும்கூட) அதன் விளைவாக அலுவர்கள், கருவூலம் மற்றும் மாவட்டக் குழு என்பவைகள் இதன் விளைவாக ஏற்படும்

சபை | சபை | சபை

பிரதிநிதிகள் - அலுவலர்கள் - கருவூலம் - மாவட்டம் - குழுக்களை உருவாக்குதல்

3. ஒரு சபை அல்லது அதன் அலுவலர்கள் அல்லது சபை அங்கத்தினர்கள் மற்றொரு சபையின் மீது அதிகாரம் செலுத்த தொடங்குதல்

அலுவலர்கள்
பலமான சபை

பலவீனமான | புதிய சபை

4. ஒவ்வொரு சபையும் அதற்கான முடிவுகளை எடுத்தல் அதன் சொந்த காரியங்களை நடத்துதல் மற்றும் அதன் சொந்த வேலையை செய்தல் இவைகளில் ஏதாவது மாற்றம்

சபை | சபை | சபை

வேலை | முடிவுகள் | காரியங்கள்

**நடப்புச் செய்திகள்**

- 25 ஆண்டுகளுக்குப் பின் செங்கோட்டை – மயிலாடுதுரை விரைவு ரயில் சேவை
- போஸ்ட் ஆபிஸில் உங்கள் 10 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் காப்பாளர் திட்டம் மூலம் கணக்கு துவங்கலாம்
- இங்கிலாந்தை ஆளும் முதல் இந்தியர் ரிஷி சுனக்

**ஜெபியுங்கள்**



- டிசம்பர் மாத கூட்டங்களுக்காக...
- புதிய ஆண்டிற்காக...
- புதிய இடங்களில் சபைகள் எழும்ப...
- புதிய ஊழியர்கள் எழும்ப...
- புதிய வாசகர்கள் கிடைக்க...
- புது பெலனை வாசகர் அனைவரும் பெற்றுக்கொள்ள...
- இவ்விதழின் ஆசிரியரின் குடும்பத்திற்காகவும், சபைக்காகவும்...

பெண்கள் பகுதி

## புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

## Beware of Leaven

*-Glory Arjunan*



பரிசுத்த வேதாகமம் அநேக விஷயங்களில் நம்மை எச்சரித்து போதிக்கின்ற ஒரு ஜீவனுள்ள புத்தகமாக இருக்கிறது. இங்கே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது உவமைகள் ஒன்றில் 'புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்' என்று எச்சரித்து சொல்லுகிறார். அது என்ன, புளித்தமாவு என நீங்கள் நினைக்கலாம். வாருங்கள் அதைக் குறித்து சற்றே தியானிப்போம்.

"இயேசு அவர்களை (சீஷர்களை) நோக்கி: பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றார்" (மத்.16:6). மேலும் தொடர்ச்சியாக, "அப்பொழுது, அவர் அப்பத்தின் புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டுமென்று சொல்லாமல், பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் உபதேசத்தைக்குறித்தே அப்படிச் சொன்னார் என்று அறிந்து கொண்டார்கள்" (மத்.16:12) என்று வாசிக்கிறோம்.

இன்றைய நாட்களில் இந்த பரிசேயர், சதுசேயரின் உபதேசத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பின்பற்றுகிற அநேகர் உண்டு. எனவே பரியசேயர் மற்றும் சதுசேயர் யார் என்றும் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றும் அறிந்துகொள்ளுவோம்.

**பரிசேயர்:**

- பரிசேயர் என்றால் பிரிந்தவர்கள் எனப் பொருள்படுத்துகின்றனர்.
- இவர்கள் நியாயப்பிரமாணத்தையும், தங்களுடைய சுய போதனைகளையும் பின்பற்றியவர்கள்
- ஞானஸ்நானம், கைகால் கழுவுதல், பாத்திரங்களை சுத்தமாக்குதல், ஓய்வு நாளை நுட்பமாக கைக்கொள்ளுதல், சுயநீதியினால் நன்மையடையலாம் என்ற நம்பிக்கை, உபவாசித்தல், தங்களை மேன்மையாக எண்ணி மற்றவர்களை குறை சொல்லுதல்
- ஆத்துமா சாவதில்லை, உயிர்தெழுதல் உண்டு, நியாயத்தீர்ப்பு உண்டு
- தூதர்களில் நம்பிக்கை...

மேற்குறிப்பிட்டவற்றை பின்பற்றியும் அதில் நம்பிக்கை யுள்ளவர்களாகவும் வாழ்ந்து வந்தவர்கள் தான் இந்த பரிசேயர். இவர்களைக் குறித்தும் இவர்களுடைய கொள்கைகளைக் குறித்தும் தான் எச்சரிக்கையாயிருக்கும்படி இயேசு சொல்லுகிறார். மேலும் இயேசு இவர்களைக் குறித்து சொல்லும்போது; "...மாயமாகிய பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (லூக்.12:1) என்றார்.

மேலும், சதுசேயரைக் குறித்தும் இவ்விதமாகவே அவர்களுடைய உபதேசங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று சொல்லுகிறார். இந்த சதுசேயர் யார், எப்படிப்பட்டவர்கள் எனப் பார்ப்போம்.

**சதுசேயர்:**

- பழைய ஏற்பாட்டின் ஆசாரியன் 'சாதுக்' என்பவனின் வழித்தோன்றல் எனக் கூறப்படுகிறது
- இவர்கள் செல்வந்தர், ஆசரிய குடும்பத்தினர், அரசியலில் பிரபல்யமானவர்கள்
- தூதர்கள், பிசாசுகள், நியாயத்தீர்ப்பு, பாரம்பரியம் போன்றவற்றில் நம்பிக்கையில்லாதவர்கள்
- உயிர்த்தெழுதல் இல்லை என்பவர்கள் (மத்.22:23, லூக்.20:27, அப்.23:8- வாசிக்கவும்).

பார்த்தீர்களா, அன்பு சகோதரிகளே! இந்த பரிசேயரும், சதுசேயரும் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு எவ்வளவு முரண்பாடுடையவர்களாயிருந்திருக்கிறார்கள்! இப்பேர்பட்டவர்கள் எதை போதித்திருப்பார்கள்? ஒருவேளை, பரிசேயர் என்பவர்களின் கொள்கைகளும் நம்பிக்கைகளும் வேதாகமத்திற்கு ஒத்துத்தானே இருக்கின்றன என நீங்கள் நினைக்கலாம். நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றினவர்கள் தங்கள் சுயபோதனைகளையும் பின்பற்றினார்களே! கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்து வருகிற நாம் எதைப் பின்பற்ற வேண்டும் என அறிந்து கொள்வது அவசியமல்லவா? "கிறிஸ்துவின் உபதேத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல, கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்" (2யோவா.9) என்று வேதம் கூறுகிறது. அப்படியானால், நாம் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளக்கூடாதா என்ற கேள்வி எழும்பலாம். "மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோம.3:19) என்று வேதம் கூறுகிறது.

சதுசேயர் குறித்த காரியம் என்னவென்றால்; அவர்களுடைய கொள்கைகளும், கோட்பாடுகளும் முற்றிலும வேதாகம போதனைக்கு முரணானது மட்டுமல்ல பரிசேயரின் கொள்கைகளுக்கும் இவர்கள் வேறுபட்டவர்களாயிருந்தனர். எனவே இந்த இருவரைப் பற்றி அப்போஸ்தலர் 23:8 "என்னத்தினாலென்றால், சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். பரிசேயரோ இவ்விரண்டும் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள்" என்று கூறுகிறது.

இன்றைய கிறிஸ்தவ வட்டாரங்களிலும் பலவிதமான போதனைகள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது. தங்கள் இஷ்டம் போல தங்களுக்கென சில போதனைகளை வகுத்துக் கொண்டு மனுஷரைப் பிரியப்படுத்துகிறவர்களாக, வயிற்றுக்கென்று ஊழியஞ்செய்து கொண்டு வருகின்றனர். இப்பேர்பட்டவர்களின் போதனைகள் வேதாகமத்தைச் சார்ந்ததைப் போல தோற்றமளிக்கலாம். எனவே தான் நம் ஆண்டவராகிய "இயேசு அவர்களை நோக்கி: பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றார்" (மத்.16:6). ஏனென்றால்; புளித்தமாவு கொஞ்சம்

சேர்க்கப்படுமானால் புளிப்பில்லாதமாவையும் புளித்தமாவு உப்பப்பண்ணிவிடும். பிறகு எல்லாம் புளிப்பாகிவிடும். இங்கே பவுல் குறிப்பிடும்போது; "ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே" (1கொரி.5:7) என்றான்.

ஆம், கிறிஸ்துவின் இரத்தத்தால் ஞானஸ்நானத்தில் கழுவப்பட்ட நாம் அனைவரும் புளிப்பில்லாதவர்கள். நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் உபதேசத்தைப்பின்பற்றுவோம். கலப்பிடமில்லாத புதிதாகப் பிசைந்த மாவாயிருக்கும்படி கவனமாயிருப்போம். "ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" என்று (1கொரி.5:8) எழுதப்பட்டுள்ளது. "புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும்" (கலா.5:9) என்பதை அறிந்த நாம் "இந்தப்போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல" (கலா.5:8) என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.


ஏனென்றால், பிசாசானவன் ஆதியிலிருந்தே பெண்கள் மூலமாகவே சகலவற்றையும் நடத்திக்கொண்டு வருகிறான். அன்று ஏவாளை ஏமாற்றிய சர்ப்பம் கூட கர்த்தர் சொன்ன காரியங்களில் 4/5 காரியங்களைக் கூறியது. நன்மை தீமை அறியத்தக்க கனி என்றது, தேவர்களைப்போல ஆவீர்கள் என்றது, சகல விருட்சத்தின் கனியை புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டா என்றது, நீங்கள் இதைப் புசிக்கும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றது. இப்படியாக தேவன் அவர்களுக்குச் சொல்லிய நான்கு காரியங்களையும் சொன்னது, ஆனால் "நீங்கள் சாகவே சாவதில்லை" என்ற பொய்யையும் கூறி எளிதாய் ஏவாளை வஞ்சித்தது. ஆம், அன்பு சகோதரிகளே, அநேகருடைய போதனைகள் பரிசேயர், சதுசேயர் என்பவர்களுடைய போதனைகளைப் போல் தான் உள்ளது. கேட்பதற்கு வேதாகம போதனை போலவும், மனதிற்கு ஆறுதலையும் ஆசீர்வாதத்தையும் கொடுப்பதைப் போல காணப்படும். கள்ள உபதேசங்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள். தேவனையும் கிறிஸ்துவையும் அறிகிற அறிவில் வளர வேதாகமத்தை வாசியுங்கள், குறிப்பாக புதியஏற்பாட்டு புத்தகத்தை வாசியுங்கள்.

இயேசு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவே வந்தார். நிறை வேற்றினார். நம்மோடு புதிய உடன்படிக்கை ஏற்படுத்தியுள்ளார். வருகின்ற புதிய ஆண்டில் புதிதாய் பிசைந்த மாவைப்போல் புதிய உடன்படிக்கையைப் பின் பற்றுவோம் கள்ளப்போதனைகளுக்கு விலகி நம்மைக் காத்துக்கொள்ளுவோம். வேதாகமத்தை வாசிக்கும் போது, யார், யாருக்கு, எப்போது சொல்லப்பட்டது என்ற கேள்வியோடு வாசியுங்கள். கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருங்கள், மீறி நடக்கிற எவனும் கிறிஸ்துவையும் பிதாவையும் உடையவன் அல்ல என்ற 2யோவான் 9 -ம் வசனத்தை மறவாதிருங்கள். கர்த்தர் தாமே நம்மை அவருடைய சத்தியத்தில் நடக்க உதவிசெய்வாராக. ஆமென்.

சிறுவர் பகுதி

# தன் உயிரைப்போல சிநேகித்த யோனத்தான்
# David & Jonathan

**வேதபகுதி**
**1சாமுவேல் 18:1-4**



தாவீதும், யோனத்தானும் நல்ல நண்பர்கள். யோனத்தான் தாவீதை தன் உயிரைப்போலச் சிநேகித்தான். நீங்கள் உங்களுடைய நண்பனை இப்படிச் சிநேகிக்கிறீர்களா? அவர்கள் இருவரும் சிநேகத்திற்கு அடையாளமாக உடன்படிக்கைபண்ணிக்கொண்டார்கள். அது எப்படியென்றால். சவுல் ராஜாவுடைய மகனான யோனத்தான் தான் போர்த்துக்கொண்டிருந்த சால்வையைக் கழற்றி, அதையும், தன் வஸ்திரத்தையும், தன் பட்டயத்தையும், தன் வில்லையும், தன் கச்சையையும்கூடத் தாவீதுக்குக் கொடுத்தான்.

இரண்டு நண்பர்கள் ஒருவரையொருவர் சிநேகிக்கிறார்கள் என்றால் அவர்கள் தங்களுடைய பொருள்களை கொடுத்து அன்பு செலுத்துவார்கள். நீங்களும் உங்களுடைய நண்பனும் அவ்விதமாக ஒருவருக்கொருவர் உடமைகளை கொடுத்து அன்பு கூருகிறீர்களா? யோனத்தானும் தாவீதும் அவ்விதமாக அன்பு கூர்ந்து ஒருவரையொருவர் சிநேகித்தார்கள்.



**மனப்பாட வசனம்**
நாம் தேவனுடைய கற்பனைகளைக்கைக்கொள்வதே
அவரிடத்தில் அன்பு கூருவதாம்;
அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல. 1யோவான் 5:3

# நான் யார்? - Who Am I?



- நான் லேவி கோத்திரத்தான்
- பார்வோனின் குமாரத்தி எனக்கு பெயர் வைத்தாள்
- நான் கெர்சோம் என்ற மகனைப் பெற்றேன்
- கர்த்தர் முட்செடியின் நடுவிலிருந்து என்னோடே பேசினார்
- நான் தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தேன்
- நான் இரவும் பகலும் 40 நாட்கள் மலையில் இருந்தேன்
- நான் 120 வயதில் மரித்தேன்

## வேத அறிவுப் போட்டி எண்: 268

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. உன்னுடைய கண்களினாலே அதைக் காண்பாய் ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய் என்று யார் யாரை நோக்கிச் சொன்னான்?
2. ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள். இது சரியா?
3. தாவீது இருபது வயது முதல் அதற்குக் கீழ்ப்பட்டவர்களின் இலக்கத்தைத் தொகையேற்றினானா?
4. தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும் என்பது சரியா?
5. பென்யமீனிலே எலியாதா என்னும் பராக்கிரமசாலி இருந்தான்; அவனிடத்திலே வில்லும் கேடகமும் பிடிக்கிறவர்கள் எத்தனை லட்சம்பேர் இருந்தார்கள்?
6. அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் பவுலுக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்தவன் யார்?
7. அர்தசஷ்டா ராஜா பரலோகத்தின் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் போதிக்கிற உத்தம வேதபாரகன் என்று யாரைக் குறிப்பிட்டு எழுதுகிறான்?
8. அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள் அதினாலே சிலர் அறியாமல் எவரையும் உபசரித்ததுண்டு?
9. நான் யூதாதேசத்திலே அதிபதியாக இருந்த நாட்களில் அதிபதிகள் வாங்குகிற படியை நான் வாங்கவில்லை என்றவன் யார்?
10. பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் என்னவாக்குங்கள் என வேதம் சொல்லுகிறது?


## வேதாகம ஆய்வு... 52 காத் –Gad



1. **யாக்கோபின் ஏழாம் மகன்**
2. **லேயாள் அவனுக்கு காத் என்று பெயரிட்டாள் – ஆதி.30:11**
3. **காத் புத்திரருக்கு ஆடு மாடுகள் திரளாய் இருந்தது – எண்.32:1**
4. **காத் புத்திரர் சுதந்தரம் பெற்றார்கள் – யோசு.13:28**
5. **மோசேக்கும் தேவனுக்கும் கீழ்ப்படிந்தார்கள் – எண்.32:31**

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
December 2022

**கவலைப்படாதே**
**தேவன் ஒருபோதும் உன் கண்ணீரைக்**
**காணாதவர் அல்ல,**
**உன் ஜெபத்தை ஒருபோதும் கேளாதவர் அல்ல,**
**மேலும் உன் வேதனைகளுக்கு ஒருபோதும்**
**அமைதியாய் இருப்பவர் அல்ல.**
**அவர் காண்கிறார், அவர் கேட்கிறார்**
**அவர் உன்னை விடுவிப்பார்.**



**Don`t Worry**

**God is never blind to your tear, never deaf to your prayers and never silent to your pains. He sees. He hears and He will deliver you.**



Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program: All Days of the Week

*Every Monday & Wednesday 6.00 P.M on Joy TV*
*Every Tuesday 6.00 P.M on Tamilan TV*
*Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV*
*Ever Friday 6.00 P.M on Channel 316 TV*
*Every Saturday 8.00 P.M on Nambikkai TV*

YouTube : the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



